**OS No.79/2022**

PW 1 - ஹபீப்ரஹ்மான்

நாள் 15.04.2026

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.**

நாளது தேதி வரை தாவா சொத்திற்கு உண்டான பட்டா என்னுடையவும், 1 ம் பிரதிவாதியுடையவும் தகப்பனார் ஷேக்இப்ராகிம் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான்.

நான் கூறும் தாவா ஈடுகடன் பத்திரத்தின் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் நகல் தான் தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய தகப்பனாருக்கும், தாயாருக்கும் பிறந்தவர்கள் 1.இஸ்மாயில், 2. முத்தாஜ்பேகம், 3. அன்வர்பேகம், 4. ஜாகீதா, 5. முகமதுஇக்பால் ( 1 ம் பிரதிவாதி) 6. சம்சன்மகரிபா, 7. நான் ( வாதி ). மேலே சொல்லப்பட்ட 7 நபர்களும் என் தந்தையின் வாரிசுகள் ஆவார்கள்.

மேலே சொல்லப்பட்ட இஸ்மாயில் இறந்துவிட்டார். அவருடைய வாரிசு 2 ம் பிரதிவாதி காதர்மணியம். அவருக்கடுத்து பக்கீர்முகமது பிறந்தார். அவருக்கு 3 பெண் மக்கள் உள்ளார்கள். மேலே சொல்லப்பட்ட அன்வர்பேகம் இறந்துவிட்டார்.

அவருடைய வாரிசுகள் முகமதுஉஸ்மான், தங்கமுகமது, மகதும்சாரா ஆகியோர்கள் ஆவார்கள்.இவர்களில் சமீபத்தில் மகதும்சாரா இறந்துவிட்டார். மகதும்சாராவின் வாரிசுகள் அவருடைய கணவர் மற்றும் அவருக்கு பிறந்த மகன் ஆவார்.

மேலே சொல்லப்பட்ட ஜாகீதா இறந்துவிட்டார். அவருடைய கணவர் நூருல் அமினும், அவருடைய மக்கள் 4 பேர்கள் வாரிசுகள் ஆவார்கள்.

மேலே சொல்லப்படும் முன்தாஜ்பேகம் உயிருடன் உள்ளார். தாவா ஈடுகடன் பத்திரத்தில் தாவா சொத்தை சுவாதீனத்தில் ஒப்படைத்ததாக வாசகங்கள் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

தாவா ஈடுகடன் பத்திரத்தில் உள்ள அடமான கடன் தொகை எவ்வளவு என்று கேட்டால் ரூபாய் 14000/– ஆகும். பெற்ற தகப்பனாருக்கே நீங்கள் வட்டிக்கு கடன் கொடுத்தீர்களா என்றால் நான் கொடுத்த பணத்திற்கு ஈடாக அந்த இடத்தை எனக்கு பதிந்து கொடுத்தார்.

தாவா ஈடுகடன் பத்திரத்தில் பணப்பற்று விபரம் எங்கு சொல்லப்பட்டுள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியும். மொத்த ரூபாய் 14000/– ரொக்கமாக கையில் கொடுத்தேன். எங்கு வைத்து எந்த தேதியில் கொடுத்தீர்கள் என்றால் ராஜகம்பீரத்தில் உள்ள எங்கள் வீட்டில் வைத்து கொடுத்தேன். 1987 ம் ஆண்டு 20 ம் தேதி என்று நினைக்கிறேன் மாதம் தெரியாது.

வா.சா.ஆ 1 ஆவணத்தில் கண்ட தாவா ஈடுகடன் தொகை தகப்பனார் ஷேக்இப்ராகீம் செலுத்திவைக்க முடியவில்லை என்றும், மேற்படி ஈடுகடன் தொகையையும் என் உடன் பிறந்தவர்களும் செலுத்திவைக்க மறுத்துவிட்டார்கள் என்றும் நான் என் நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதியை பிராதில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் அப்படி எதுவும் பிராதில் கூறவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ 1 ஆவணம் மூலமாக 1 ம் பிரதிவாதிக்கும் எனக்கும் தந்தையான ஷேக்இப்ராகீம் என்பவருக்கு எந்த ஒரு தொகையையும் கடனாக கொடுக்கவில்லை என்றும் அதற்கு ஆதரவாக அவர் உங்களுக்கு வா.சா.ஆ 1 தாவா ஈடுகடன் பத்திரத்தை எழுதி

கொடுக்கவும் இல்லை என்றும், எழுதிக்கொடுத்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

மேலாயூர் ஊரில் உள்ள கேசவன் என்பவரை உங்களுக்குத் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்திற்கும் நீங்கள் சொல்லும் கேசவன் மேலாயூர் என்பவருக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சம்பந்தம் இல்லை.

நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 2 தாவா உயில் பத்திரம் எத்தனை தாள்களை கொண்டுள்ளது என்று கேட்டால் 2 தாள்களை கொண்டதாகும். நான் சொல்லும் எண்ணிக்கையில் எத்தனை தாள் முத்திரைத்தாள் எத்தனைத்தாள் முத்திரை இல்லாத தாள் என்று சொல்லமுடியுமா என்றால் ஒரு முத்திரைத்தாள், கூடுதலாக ஒரு பெரிய பேப்பர் உள்ளது.

ஒரு முத்திரைத்தாளின் மதிப்பு எவ்வளவு என்று கேட்டால் மதிப்பு தெரியாது. தாவா சொத்து அமைந்துள்ள ராஜகம்பீரம் ஊரில் உள்ள சொத்துக்கள் சம்பந்தமான பத்திரம் எழுதுவது, வாங்குவது, பதிவது, சம்பந்தப்பட்ட விசயங்கள் மானாமதுரையில் வைத்து சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து நடைபெறும் பொது மனிதர்களை வைத்து எழுதுவதும், வாங்குவது, பதிவது நடைபெறும்.

நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 2 உயில் ஆவணத்தை எழுதியது யார் என்று கேட்டால் மானாமதுரையில் உள்ள அண்ணாசிலை பக்கத்தில் உள்ள சார்பதிவு அலுவலகத்தில் வேலை செய்து ஓய்வு பெற்ற ஒரு நபர் எழுதிக்கொடுத்தார்.

வா.சா.ஆ 2 ஆவணத்தில் உள்ள விபரங்களை யார் சொன்னார்கள் என்றால் மேற்படி ஓய்வு பெற்ற சார்பதிவாளர் சொன்னார்.

வா.சா.ஆ 2 தாவா உயில் ஆவணம் எழுதப்பட்டதாக நான் சொல்லும் காலகட்டத்தில் ஆவணங்களில் புகைப்படங்கள் ஒட்டப்படும் நடைமுறை இல்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

நீங்கள் சொல்லும் தாவா உயில் பத்திரத்தில் தாவா சொத்து விபரம் சொல்லப்படவில்லை என்றால் பிராதில் சொல்லப்பட்டுள்ளது தான் வா.சா.ஆ 2 ல் உள்ளது என்று சாட்சியானவர் கூறுகின்றார்.

வா.சா.ஆ 2 தாவா உயில் பத்திரத்தில் பிராது சொத்து விபரம் சொல்லப்படவில்லை சொல்லப்பட்டுள்ளதாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 ஆவணத்தை தாவா வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்து இவ்வழககில் தாக்கல் செய்து பொய் கட்சி செய்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ 2 தாவா உயில் பத்திரத்தில் புகைப்படத்தை ஒட்டியது யார் என்றால் எனக்குத்தெரியாது. ஒட்டப்பட்டுள்ள புகைப்படத்தில் உள்ள நபரும் உங்கள் தகப்பனார் இல்லை என்றால் சரியல்ல. என் அப்பா தான்.

புகைப்படத்தில் உள்ள நபர் என் அப்பா தான் என்று பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து உங்கள் அனுபவத்திற்கு உள்ளது என்று சொல்லியுள்ளதற்கு ஏதேனும் வரிரசீதோ, சாகுபடி அடங்கல், வருவாய் துறை ஆவணங்களோ தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை.

வா.சா.ஆ 4 ஆவணத்தில் தாவா சொத்து விபரம் சொல்லப்படவில்லை என்றால் சொல்லப்படவில்லை. தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்று கேட்டால் சர்வே எண் 121/3 ஆகும்.

மேற்படி சர்வே எண் 121/3 ஆனது வா.சா.ஆ 4 ஆவணத்தில் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ 4 ஆவணம் தாவா சொத்திற்கு சம்பந்தம் இல்லாத ஆவணம் என்றால் சரிதான்.

1 ம் பிரதிவாதி என் உடன் பிறந்த அண்ணன் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி என் அண்ணன் இஸ்மாயிலின் மகன் என்றால் சரிதான். இரண்டு பிரதிவாதிகளும் எனக்கு பங்காளி உறவுமுறை என்றால் சரிதான்.

என் அப்பா உயிருடன் இருந்த காலம் வரையில் தாவா சொத்தைப் பொறுத்து உங்களுக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து விஸ்தீரணம் என்னவென்று கேட்டால் 1 ஏக்கர் 102 செண்ட் ஆகும்.

வழக்கு போட்ட காலகட்டத்தில் ஒரு செண்ட் ரூபாய்.200000/- மதிப்பு பெறும் என்று சொன்னால் தெரியாது. வழக்கு சொத்தின் ஒருசெண்ட் ரூபாய் 200000/- மதிப்புபெறும் என்றும், அந்த வகையில் தாவாமொத்த சொத்தின் மதிப்பு ரூபாய் 2 கோடிக்கு மேல் பெறும் என்றும் நான் பிராது தாக்கல் செய்த காலத்தில் குறைத்து மதிப்பிட்டு குறைவாக மவுண்ட் கட்டியிருப்பது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

தாவா சொத்தைப் பொறுத்து உங்கள் தகப்பனார் எந்த ஆவணமும் எழுதிவைக்காமல் இறந்துவிட்டதால் என்னுடைய தகப்பனாரின் அனைத்து வாரிசுகளுக்கும் தாவா சொத்தில் பாத்தியமும், அனுபவமும் சட்டப்படி சித்தித்து இருக்கின்றது என்றால் சரியல்ல.

நீங்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கிற்கு பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து விபரம்

தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சமூகம் நீதிமன்றம் அசல் வழக்கு எண் 62/2017 ல் பிராதில் 7 வதாக கையொப்பம் செய்துள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான் மேற்படி பிராதின் அலுவலக உண்மை நகல் **பி.வா.சா.ஆ 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவா சொத்து எந்த காலத்திலும் உங்களுடைய தனித்த பாத்தியத்திலும் அனுபவத்திலும் கிடையாது என்றும் எனது தந்தையின் அனைத்து வாரிசுகளின் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் சொன்னால் சரியல்ல. நீங்கள் உண்மைக்கு மாறாக பொய்யாக பிராது, நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து வழக்காடி வருகிறீர்கள் என்றும், உங்கள் வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**–Sd–**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd–**
**District Munsif,**
**Manamadurai.**